RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s-22239

OPEN ACCESS

# சிவகாமியின் சபதத்தில் இடம் பெறும் நாயன்மார்கள்

பா. விஷ்ணுபிரியா [அ, *]

[அ] தமிழ்த்துறை, , டிரினிடி மகளிர் கல்லூரி, நாமக்கல்-637002, தமிழ்நாடு, இந்தியா

# Nayanmars in Sivakami Sabatham

**B. Vishnupriya [a, *]**

[a] Department of Tamil, Trinity College For Women, Namakkal-637 002, Tamil Nadu, India

* Corresponding Author: bvishnupriya1982@gmail.com

Received: 26.09.2022
Revised: 06-11-2022
Accepted: 11-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

Periyapuranam composed by Sekizhar is considered to be the tenth of the twelve Thirumurai. This book which dates back to the 12th century A.D is a Saivite scripture. This book has been greatly appreciated by the scholars of the West. It describes about the life of the people who showed concern over the worldly creatures and had worshipped God with love. It details about the life stories of the 72 Shaiva Nayanars. Sekizhar named this book as Tiruthondapuranam.

**Keywords:** Tiruthondapuranam, Shaiva Nayanars, God, Thirumurai

## முன்னுரை

பன்னிரு திருமுறைகளுள் பத்தாம் திருமுறையாகக் கருதப்படுவது சேக்கிழாரால் இயற்றப்பட்ட பெரியபுராணம் ஆகும். கி.பி.12 ஆம் நூற்றாண்டைச் சேரர்ந்த இந்நூல் தன்னேரில்லாத சைவ சமயக் காப்பியமாக கருதப்படுகிறது. மேலை நாட்டு அறிஞரகளால் பெரிதும் பாராட்டப்பட்ட இலக்கியச் சுவையினை உடைய இந்நூல் அகச்செருக்கும் புறச்செருக்கும் ஒழித்து உலக உயிர்கள் மீதும் இறைவன் மீதும் அன்பு காட்டி மனமுருகி பணி செய்து கிடத்தலையே வாழ்வாகக் கொண்ட தொண்டர்களின் வாழ்வைச் சுவைபடக் கூறுகிறது. இதில் 63 தனியடியார்கள் 9 தொகையடியார்கள் என எழுபத்தி இரண்டு அடியவர்களின் வரலாறுகளும் அடங்கியுள்ளன. சேக்கிழார் தாம் பாடிய நூலுக்கு இட்ட பெயர் திருத்தொண்டர்புராணம் என்பதாகும் (Gnanasambandan, 1999). இறைவனை உள்ளத்தில் எழுந்தருளச் செய்து அவனுடன் உறவாடிக் கொண்டிருக்கும் அடியவர்கள் சாதாரண மக்களைக் காட்டிலும் சிறந்தவர்களாவர் என்ற உண்மையை,

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்

ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோகுவார்

கூடும் அன்பினில் கும்பிடலே யன்றி

வீடும் வேண்டா விறலின் விளங்கினார்" (Sekkilhar, 2009)

என்ற பாடலில் கூறியிருக்கிறார்.

## சிவகாமியின் சபதத்தில் இடம் பெறும் நாயன்மார்கள்

சிவகாமியின் சபதம் புதினத்தில், ‘சைவசமய நாயன்மார்களுள்’ அடங்கும் பரஞ்சோதி, மங்கையர்க்கரசியார், அப்பர், குலச்சிறை, நெடுமாறன் போன்றோர் இடம் பெற்றுள்ளனனர். இவர்களுள் பரஞ்சோதியும் (சிறுத்தொண்டர்), மங்கையர்க்கரசியும், குலச்சிறையும் ஆதியிலிருந்தே சைவ சமயத்தவர்களாக இருந்தனர். அப்பரும், நெடுமாறன் (நிறைசீர் நெடுமாறன், கூன் பாண்டியன்) சமணத்திலிருந்து சைவ சமயம் சேர்ந்தவர்களாவர்.

## பரஞ்சோதி (சிறுத்தொண்டர்)

பரஞ்சோதி கீழைச் சோழ நாட்டைச் சேர்ந்த திருச்செங்காட்டங்குடி என்னும் கிராமத்தில் மாமாத்திரர் குலத்தில் பிறந்தவர். இவரது முன்னோர்கள் இராஜசேவையில் ஈடுபட்டுப் படைத் தலைவர்களாயிருந்தார்கள். சோழ வம்சம் பழம் பெருமை இழந்து பல்லவர் ஆட்சி ஓங்கிய போது மாமாத்திரர் குலமும் அதன் சிறப்பை இழந்தது. சோழவம்சம் ஒடுங்கிய பின்னர் இம்மாமாத்திரர்கள் போர்த் தொழிலையும் எல்லைக் காவல் தொழிலையும் கைவிட்டு விவசாயத் தொழிலை மேற்கொண்டிருந்தார்கள். இதனை.

.“நிலவியஅத் திருப்பதியில் நெடுஞ்சடையார் நீற்றடைவால்

உலகில்வளர் உயிர்க்கெல்லாம் உயர்காவற் தொழில் பூண்டு

மலிர்புகழ்மா மாத்திரர்தங் குலம்பெருக வந்துள்ளார்

பலர்புகழுந் திருநாமம் பரஞ்சோதி யார்என்பார்” எனும் பெரியபுராணம் சிறுத்தொண்டர் புராணம் பாடல் கொண்டு அறியலாம் (Sekkilhar, 2009)

இம்மாமாத்திரர் குலத்தில் பிறந்த பரஞ்சோதி கல்விகற்க வேண்டி காஞ்சிநகர் வந்தான் என சிவகாமியின் சபதம் சுட்டுகிறது. இவன் முதலாம் நரசிம்மவர்மனின் படைத் தளபதியாகப் பொறுப்பேற்று வாதாபிப் பெரும் போரில் இரண்டாம் புலிகேசியைத் தோற்கடித்து வெற்றி பெற்றான் என்பதை சிவகாமியின் சபதம் புதினம் காட்டியுள்ளது. இவனுடைய வாதாபிப் படையெடுப்பு வெற்றி யானைப்படையால் நிகழ்ந்தது என்பதனை,

“கதிர் முடிமன் னனும் இவர்தங் களிற்றுரிமை ஆண்மையினை

அதிசயித்துப் புகழ்ந்துரைப்ப”

எனும் பெரியபுராணம் பாடல் மூலம் அறியலாம் (Sekkilhar, 2009). இச்சிறப்பிற்குரிய பரஞ்சோதி வாதாபிப் பெரும் போருக்குப் பின்னர் அன்பைப் பாராட்டும் சைவ சமயத்தின் தொண்டராய் மாறினார். இவர் பிற்காலத்தில் சைவ சமயத் தொண்டராக போற்றப்படுவார் என்பதை அறிந்த திருநாவுக்கரசர், கதைகளிலும் காவியங்களிலும் பிரசித்தி பெறப்போகும் உத்தமமான புதல்வன் இவர்களுக்கு உதிப்பான் என்று அருள் புரிந்ததாக புதினம் வழி (சி.ச. IV -784) அறிய முடிகிறது.

“கரிகால் வளவன் காலத்திலிருந்து சில நூற்றண்டுகள் மிகப் பிரபலமாக விளங்கியிருந்த சோழ ராஜ்ஜியமானது நாளடைவில் சீரும் சிறப்பும் குன்றித் தெற்கே பாண்டியர்களாலும், வடக்கே பல்லவர்களாலும் நெருக்கப்பட்டு இரண்டு மூன்று கிளைகளாகப் பிரிந்தது. அதனால் உறையூரில் நிலைபெற்ற சோழ வம்சத்து மன்னர் ஒரு சிறு ராஜ்ஜியத்துக்கு உரியவர்களாயிருந்தார்கள். கொடும்பாளூர் கிளை வம்சத்தின் பிரதிநிதியாக அப்போது விளங்கிய செம்பியன் வளவனுக்குப் புத்திர பாக்கியம் இல்லை. குலத்தை விளங்க வைக்க ஒரு புதல்வி மட்டுமே இருந்தாள். அந்த அருமைக் குமாரிக்கு மங்கையர்க்கரசி என்று பெயர். இவர்களது குலதெய்வம் முருகப்பெருமான். முருகன் தமிழ்க்கடவுள். மங்கையர்க்கரசி பழந்தமிழ் சோழ வம்சத்தவளாக இருப்பதால் அவள் குல தெய்வமும் பழந்தமிழ் தெய்வமான முருகப்பெருமான் ஆவான்.

சிவகாமியின் சபதம் மங்கையர்க்கரசியைக் குறிப்பிடுகையில் அவள் பிற்காலத்தில் பாண்டியன் நெடுமாறனின் தேவியாகி ஞானசம்பந்தரை மதுரைக்குத் தருவித்து சிவனடியார் கூட்டத்தில் என்றும் அழியாத புகழ் பெறப் போகிறவர்" என்று அறிமுகம் செய்கிறது. பல்லவர் ஒற்றர் படையைச் சேர்ந்த குண்டோதன், ரத சாரதி கண்ணபிரான் (கற்பனைப் பாத்திரங்கள்) போன்றோரின் குல தெய்வங்களும் முருகனே என புதினம் சுட்டுவதைக் கொண்டு பல்லவர் காலத்தே தமிழகத்தில் வாழ்ந்தவர்கள் தமிழர் என்பதனால் தான் தமிழ்க்கடவுளை வணங்கினர் என்பதை அறிய முடிகிறது.

## திருநாவுக்கரசர் (அப்பர்)

திருநாவுக்கரசர் இறைவனை இன்னிசைப் பாசுரங்களால் பாடித் துதித்து வழிபட்டு வந்தவர். சமணத்திலிருந்து சைவம் மாறினார். சமணனாக இருந்த மகேந்திரனை சைவ சமயத்திற்கு மாற்றினார். சமண, பௌத்த புறச் சமயங்களை எதிர்த்து வைதீக சமயத்தோடு இணைந்தார். இதனால் சமண, பௌத்த சமயங்கள் தங்களது செல்வாக்கை இழந்தன.

அப்பெருமானுடைய பொன் வண்ணத் திருமேனி முழுவதும் தூய வெண்ணீறு பூசியிருந்தது. அவருடைய கழுத்தையும் மார்பையும் உருத்திராட்ச கண்டிகைகளும் தாழ்வடங்களும் அலங்கரித்தன. காதுகளிலும் ருத்திராட்ச குண்டலங்கள் இலங்கின. இடையில் தூய வெண் துகில் (ஆடை) உடுத்தியிருந்தார். இதனை, சமண துறவு வாழ்வின் அடையாளங்களான, துறக்கம் (நிர்வாணநிலை), பாயைக் கொண்டு உடம்பை மறைத்தல், மயிற்பீலி, குண்டிகை ஆகியவற்றைத் துறந்து அப்பர் வெள்ளைப் புடவையை (வேட்டியை) உடுத்திக் கொண்டார்" என்கிறார் இரா. சக்குபாய். எனவே திசைகளை ஆடையாக உடுத்தும் திகம்பர சமணசமயப் பரிவைச் சேர்ந்த அப்பர் பின்னர் சைவ சமயம் சார்ந்ததன் அடையாளமாகவே தூய வெண்ணிற ஆடையை இடையில் அணிந்திருக்கலாம் எனலாம். மேலும் அவருடைய திருமுகத்தில் ஞான ஒளிவீசிற்று. இறைவனை நினைத்து இடையறாது கண்ணீர் விட்ட அவருடைய கண்களில் பேரருள் ததும்பிற்று. கோயில் பிரகாரங்களில் புல் செதுக்குவதற்கான உழவாரப்படை அந்தச் சிகாமணியின் திருத்தோளில் சாத்தப்பட்டிருந்தது.

திருநாவுக்கரசர் காஞ்சியில் அமைந்திருந்த சைவத் திருமடத்துக்கு அதிபராக விளங்கிய போதிலும் அவ்வப்போது ஸ்தல யாத்திரை சென்று திரும்புவது வழக்கம். அவர் செல்லும் ஊர்களில் எல்லாம் உழவாரப்படை எடுத்து ஆலயத்தையும், சுற்றியுள்ள பகுதிகளையும் சுத்தம் செய்தார். மண்டகப்பட்டு கிராமமக்கள் இவருடைய வருகையினால் புண்ணியம் பெற்றனர். இவ்விதமாக அப்பரின் வருகையை ஒவ்வொரு கிராம மக்களும் எதிர் பார்த்தே இருந்தனர் எனப் புதினம் (கி.ச. II - 400) கூறுகிறது.

## பாண்டியன் நெடுமாறன்

மங்கையர்க்கரசி கணவன் பாண்டியன் நெடுமாறன் ஆவார். "பல்லவரின் வாதாபிப் போர் நடைபெற்ற காலங்களில் இவர்களுக்குத் திருமணம் நிகழ்ந்திருக்கவில்லை. அக்காலங்களில் இவன் சமணர்களின் மந்திர தந்திரங்களில் அகப்பட்டுக் கொண்டிருந்தான். இவனுருடைய சமண சமய மத மாற்றத்தைக் கண்டு சகியாத அவன் நண்பரும் அமைச்சருமான 'குலச்சிறை' காஞ்சியில் தங்கியிருந்த திருநாவுக்கரசரிடம் இளவரசன் நெடுமாறனையும் பாண்டிய நாட்டையும் காப்பாற்றும்படி வேண்டிக் கொள்கிறான்.

குலச்சிறையின் வேண்டுகோளைக் கேட்ட நாவுக்கரசர் கண்களை மூடிய வண்ணம் ஆலோசனையில் இருந்தார். பிறகு குலச்சிறையைப் பார்த்து மந்திர தந்திரங்களில் வல்லவர்களான சமணர்களுடன் போராடுவதற்குச் சக்தியோ விருப்பமோ தற்போது என்னிடம் இல்லை. ஆனால் கேள், தம்பி! என்னுடைய அகக்காட்சியில் ஓர் அற்புதத்தை அடிக்கடி கண்டு வருகிறேன். பால் மனம் மாறாத பாலர் ஒருவர் இந்தத் திருநாட்டில் தோன்றி அமிழ்தினும் இனிய தீந்தமிழில் பண்ணமைந்த பாடல்களைப் பொழியப் போகிறார். அந்த இளம் பிள்ளையின் மூலமாகவே தென்பாண்டிய நாட்டிலும் சமணர்களின் ஆதிக்கம் நீங்கும் சைவம் தழைக்கும். சிவனடியார்கள் பல்கிப் பெருகுவார்கள்" என்றார்.

இவ்விதம் அப்பர் கூறிய பாலர் ‘திருஞான சம்பந்தர்’ ஆவர் என்பது சமய வரலாறு கொண்டு அறியலாம்.

மங்கையர்க்கரசியார் அடிக்கடி “பத்து பன்னிரெண்டு பிசாசுகள் அம்மணமாக நின்று ஏதோ கோரமான சத்தம் போட்டுக் கொண்டு கூத்தாடின. அந்தப் பிசாசுகள் ஒவ்வொன்றின் கையிலும் மயில் இறகுக் கத்தை ஒன்று இருந்தது. சில சமயம் அப்பிசாசுகள் மத்தியில் நின்ற சுந்தரபுருசர் மீது மயில் கத்தைகளை வீசி அடிப்பது போல் தோன்றியது. அவர் என்னை நீ காப்பாற்ற மாட்டியா? என்று கேட்பது போலிருந்தது. அம்பிகை முன் முறையிட அவள் ஒருபாலகனை அனுப்பினாள். வந்து நின்ற பாலகன் தாயே! என்னுடன் வா! உன் நாயகனைக் காப்பாற்றித் தருகிறேன்! என்றார் எனத் தான் கண்ட கனவைக் கூறி அதன் பயனை புவனமகாதேவியிடம் வினவுவதாக புதினத்தில் இடம்பெற்றுள்ளது. இவளது கனவில் வந்த பாலகர் பாண்டிய நாட்டில் உதித்த சம்பந்தரே ஆவர் என்பது சமய வரலாற்று உண்மை. மேற்கண்ட இருவரின் வாழ்க்கைக் கதைகளையும் கொண்டு சம்பந்தர் இவர்களுக்குப் பிற்பாடு பிறந்தவர் என்பதை வரலாற்றுப் பூர்வத்தோடு ஒப்பிட்டும் அறியலாம்.

பாண்டியன் நெடுமாறன் சமணர்களின் தந்திரத்திற்குள் அகப்பட்டுக் கொண்டு சமணசமயம் சேர்ந்தான். இவனுடைய இந்த மதமாற்றச் சிந்தனைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாக அவளது தமக்கையும் நரசிம்மவர்மப்பல்லவனின் மனைவியுமான வானமாதேவி (கற்பனைப் பாத்திரம்) அவனோடு உரையாடுகிறாள் நெடுமாறனோ புழு பூச்சிகளின் உயிருக்குக்கூட ஊறு செய்யாத ஜீவகாருண்ய சமண மதத்தில் சேர்ந்து கொள்ள விரும்புவதாகத் தெரிவிக்கிறான். பல்லவர்களால் விரட்டப்பட்ட சமணர்கள் பாண்டியன் நெடுமாறனைச் சமணனாக மாற்றி அவன் மூலம் பல்லவர்கள் மீது போர் தொடுக்கச் செய்து பல்லவனைப் பழிக்குப் பழி வாங்க விரும்பியதைச் சிவகாமியின் சபதம் புதினம் (சி.ச. IV -11-13) ஆகிய பகுதிகளில் கூறுகிறது.

நெடுமாறன் சமண சமயத்தில் பற்றுக் கொண்டானானாலும் சைவத்தை வெறுப்பவனல்லன். இவனும் மகேந்திரனைப் போல சைவத்திற்கும், சமணத்திற்கும் மதிப்புக் கொடுத்தவன் என புதினம் கூறுகிறது. இவனுடைய அரூயிர் நண்பன் குலச்சிறையாரும், மனைவி மங்கையர்க்கரசியாரும் சைவர் குலத்தில் பிறந்து சைவம் சார்ந்தவர்கள் என்பதைக் காணுகையில் அவனுடைய சமயப் பொறையை அறிய முடிகிறது.

## குலச்சிறையார்

இவர் ஆதியிலிருந்தே பிறசமயம் சாராது சைவ நெறியைப் போற்றியவர். இவர் பாண்டியன் நெடுமாறனின் நெருங்கிய நண்பரும் அமைச்சரும் ஆவார். இவர் பாண்டிய நாடு மணமேற்குடியில் பிறந்தவர். வாதாபிப் பெரும் போரில், பல்லவனுக்கு உதவியாக படைகளுடன் கிளம்பிய பாண்டிய குமாரருக்கு ஓலை எழுதவும், படிக்கவும் உதவியாயிருக்குமாறு உடன் சென்றார். குலச்சிறை சமணர்களின் மாயவலையில் சிக்குண்டு சமணம் மேல் பற்றுக் கொண்ட நெடுமாறனின் செய்கையால் பெரிதும் மனம் வாடியவர். இவன் அப்பரை தன் நாட்டில் சைவம் தழைக்க உதவுமாறு கேட்பதாக சிவகாமியின் சபதம் புதினம் (IV - 5) குறிப்பிடுகிறது.

## முடிவுரை

முதலாம் மகேந்திரவர்மப் பல்லவன் காலத்தே செல்வாக்குப் பெற்றிருந்தது சமண சமயமாகும். பிறகு அப்பரின் முயற்சியால் மகேந்திரன் சைவம் சார்ந்தான். சமணர் கங்கநாடு சென்றனர். சமண சமயம் அருக தேவனை மையமாய்க் கொண்டது. சமண சமயத்தின் ஒரு பிரிவாக சைவம் கொள்ளப்படுகிறது. ஏனெனில் சமண தீர்த்தங்கரர்களுள் முதலாமவரான ரிஷப தேவர் என்னும் சொல்லில் உள்ள ‘ரிஷபம்’ சைவ சமயக் குறியீட்டு அடையாளமாகும். சிவகாமியின் சபதத்தில் ஆதியிலிருந்தே சைவ சமயத்தவர்களாய் இருந்த பரஞ்சோதி எனும் சிறுத்தொண்டர், மங்கையர்கரசி, குலச்சிறையார் போன்ற நாயன்மார்கள் பற்றியும், சமணத்திலிருந்து சைவம் மாறிய அப்பர், நெடுமாறன் போன்ற நாயன்மார்கள் பற்றியும் குறிப்பு உள்ளது.

## References

Sekkilhar, (2009) Periyapuranam, Varthaman Pathippagam, Chennai, India

Gnanasambandan, A.S. (1999) Sekkilhar Thantha Selvam, Gangai Puthaga Nilayam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License